



# செயல்பாட்டு அறிக்கை

டிசம்பர் 2023 - மே 2024

## டாக்டர் பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன்

மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
தகவல் தொழில் நுட்பவியல் & டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்
தி.மு.க. சொத்துப் பாதுகாப்புக்குழு செயலாளர்

/ptrmadurai /meendumptr /PTRmadurai



நீதிக்கட்சி உருவாக்கிய முற்போக்கு பாதையில், தந்தை பெரியார் காட்டிய சுயமரியாதை பாதையில், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பண்படுத்திய சமூகநீதி பாதையில் இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கும் வகையில் திராவிட மாடல் பாதையில் நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சிக்கு வெகுமதியாக, நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் 40/40 இடங்களில் வெற்றியை அள்ளித் தந்த தமிழ்நாட்டு மக்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தேர்தல் முடிவுகள் மூலம் தமிழ்நாட்டு மக்கள் அமைதியையும், நல்லிணக்கத்தையும் விரும்புபவர்களே தவிர ஒருபோதும் மதவாதத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் துணைபோக மாட்டார்கள் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமாகியுள்ளது. அதிலும் குறிப்பாக, நமது மதுரை மத்தியத் தொகுதியில் பெருவாரியாக வாக்களித்து இந்தியா கூட்டணியின் வேட்பாளர் சு.வெங்கடேசன் அவர்களுக்குச் சிறப்பானதொரு வெற்றியை ஈட்டித் தந்த எமது தொகுதி மக்களான உங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 20 மார்ச் 2024 அன்று தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வந்த பின் கிட்டத்தட்ட 3 மாத காலம் சட்டமன்ற உறுப்பினராக மக்கள் பணி செய்யத் தடை இருந்த போதிலும் சட்ட விதிகளுக்கு உட்பட்டு பல பணிகளை முன்னெடுத்துள்ளேன். கடந்த டிசம்பர் 2023 முதல் மே 2024 வரையிலான எனது 6 மாத கால செயல்பாட்டு அறிக்கையினை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.



# மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக எனது பணிகள்

## சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் செயல்படுத்திய திட்டப்பணிகள்.

நமது மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட புதிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறேன். மக்களுக்குத் தேவையான சாலை, தண்ணீர், கழிப்பறை, பள்ளிக் கட்டிடங்கள், அங்கன்வாடி கட்டிடங்கள், நியாயவிலைக் கடை கட்டிடங்கள் உள்ளிட்ட பணிகள் இதில் அடங்கும்.

கடந்த டிசம்பர் 2023 முதல் மே 2024 வரையிலான காலக்கட்டத்தில் எனது தொகுதி மேம்பாட்டு நிதியில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப்பணிகளின் விவரம்..

### நியாய விலைக் கடைகள்

தமிழ்நாடு அரசு பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை அவர்கள் வசிக்கின்ற பகுதியில் இயங்கி வரும் நியாய விலைக்கடைகளில் பெற்று பயன்பெறுகின்ற வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நமது மத்திய தொகுதியில் நான் ஆய்வு செய்ததன் அடிப்படையில் சில கடைகளுக்கு பொதுமக்கள் தொலைதூரத்தில் இருந்து வந்தும், போக்குவரத்து மிகுந்த சாலைகளைக் கடந்து வந்தும் பொருட்களை வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுவதை அறிந்தேன்.

இதுகுறித்து உங்களிடம் இருந்தும் எனக்கு கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றுள்ளது. மேலும் நியாய விலைக்கடைக்கு நேரில் வந்து வாங்கிச் செல்லும் முதியோர் பெருமக்களையும், ஒரே கடையில் அதிக எண்ணிக்கையில் உள்ள நுகர்வோர்களையும் நான் கவனத்தில் எடுத்துக்கொண்டேன்.

அதனடிப்படையில், தொகுதியில் தொடர்ந்து புதிய நியாய விலைக்கடை கட்டிடங்களை கட்டி வருவதோடு, அதிக எண்ணிக்கையுள்ள நுகர்வோர்கள் இருக்கும் கடைகளில் இருந்து பிரித்து புதிய கடைகளில் இணைத்தும் வருகிறோம்.

அந்த வகையில் கடந்த 6 மாதத்தில்...

1. வார்டு 61, மகபூப்பாளையம், ஜின்னா திடலில் 10லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடைக் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.

2. வார்டு 50, சிம்மக்கல், அனுமார் கோவில் படித்துறை, ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக்கடைக் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.

### போர்வெல்

பொதுமக்களின் அத்தியாவசியத் தேவையான தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன். அதில் குறிப்பிட்ட சில இடங்களில் போர்வெல் அமைப்பதே சிறந்ததாக இருக்கும்.

அந்த வகையில்..

1.வார்டு 22, நேரு நகர் பகுதியில் ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் புதிய போர்வெல், மக்கள் பயன்பாட்டுக்கு நிறுவப்பட்டுள்ளது.

2.வார்டு 21, இந்திரா நகர் பகுதியில் ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் புதிய போர்வெல் மக்கள் பயன்பாட்டுக்கு நிறுவப்பட்டுள்ளது.

### சாலைகள்

உள்ளாட்சி அமைப்புகள் பொறுப்பேற்ற பின் மதுரை மாநகரில் சாலை செப்பனிடும் பணிகள் மற்றும் புதிய சாலைப்பணிகள் துரிதமாக நடந்து வருகிறது. எனது தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், நானும், பொதுமக்களின் கருத்தறிந்து தேவைப்படும் இடங்களில் சாலைகள் அமைத்து வருகிறேன்.

அந்த வகையில்..

1. வார்டு 51, மீனாட்சியம்மன் கோவில் அருகே, சப்பாணி கோயில் தெரு மற்றும் ராமலிங்கப்பிள்ளை தெருக்களில் ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் புதிய பேவர் ப்ளாக் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

2. வார்டு 57, சோனையார் கோயில் தெருவில், ரூபாய் 6 லட்சம் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

3. வார்டு 57, பிள்ளைமார் தெருவில், ரூபாய் 6 லட்சம் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.







# நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தலைமையிலான திராவிடமாடல் அரசு சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட ஆதரவற்ற விளிம்பு நிலையில் உள்ள மக்களைக் கண்டறிந்து அவர்களுக்கான புதிய திட்டங்களை வகுத்து சமூகத்தில் அம்மக்களை தலைநிமிரச் செய்து வருகிறது. அவற்றுள் முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித்தொகை மட்டுமன்றி ஏழைப்பெண்களுக்கு, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தையல் இயந்திரம், தேய்ப்புப் பெட்டி உள்ளிட்ட தொழில் உபகரணங்களைத் தமிழ்நாடு அரசு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

மதுரை மத்தியத் தொகுதி மக்களுக்காக எனது அலுவலகத்தின் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு எனது சட்டமன்ற அலுவலகத்தில் செயல்படும் இ-சேவை மையம் மூலமாக பதிவேற்றம் செய்யப்பட்டு, வருவாய்த்துறை அலுவலர்களிடம் முறையாகச் சமர்ப்பித்து எவ்வித இடையூறுமின்றிப் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் பெற்றுத்தரப்படுகிறது.

மேலும் எனது சொந்த நிதியின் மூலமும் நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறேன். சட்டமன்ற உறுப்பினராக நான் பொறுப்பேற்ற 2016ஆம் ஆண்டு முதல் முழுமையான நலத்திட்ட பட்டியல் உங்கள் பார்வைக்கு..

| இனங்கள் | எண்ணிக்கை | மதிப்பு |
|---|---|---|
| முதியோர் உதவித்தொகை | 1160 | ₹. 1,39,20,000 |
| ஆதரவற்ற விதவை உதவித்தொகை | 568 | ₹. 68,16,000 |
| மாற்றுத்திறனாளிகளுக்கான பெட்ரோல் | 50 | ₹. 60,00,000 |
| மாநகராட்சி பள்ளிகளில் (SMART CLASS)CSR FUND | 5 | ₹. 40,00,000 |
| மாற்றுத்திறனாளி உதவித்தொகை | 58 | ₹. 10,44,000 |
| கொரோன நிவாரண நிதி (Rs.50,000) | 14 | ₹. 7,00,000 |
| சிறப்பு காதொலிக்கருவி | 1 | ₹. 6,00,000 |
| கொரோன நிவாரண நிதி (Rs.3,00,000) | 2 | ₹. 6,00,000 |
| கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை | 39 | ₹. 4,68,000 |
| சக்கர நாற்காலி (சொந்த பணம்) 2021-2024 | 58 | ₹. 4,58,200 |
| மாற்றுத்திறனாளிக்கான கைபேசி | 28 | ₹. 3,79,372 |
| செயற்கை அவயம் | 4 | ₹. 3,20,000 |
| பேட்டரி பொருத்திய சக்கர நாற்காலி | 3 | ₹. 3,18,000 |
| மடி கணினி (LAPTOP) (சொந்த பணம்) 2016-2021 | 13 | ₹. 3,00,040 |
| தையல் இயந்திரம் | 41 | ₹. 2,46,943 |
| காதொலிக்கருவி | 28 | ₹. 1,55,680 |
| முதிர்க்கன்னி உதவித்தொகை | 12 | ₹. 1,44,000 |
| சக்கர நாற்காலி (சொந்த பணம்) 2016-2021 | 9 | ₹. 1,08,000 |
| தேய்ப்பு பெட்டி | 18 | ₹. 87,948 |
| சக்கர நாற்காலி | 7 | ₹. 64,512 |
| அமைப்புசார தொழிலாளர் இறப்பு உதவித்தொகை | 1 | ₹. 55,000 |
| C.P.சக்கர நாற்காலி | 2 | ₹. 20,800 |
| மூன்று சக்கர சைக்கிள் | 3 | ₹. 18,100 |
| நடை பழகு கருவி | 2 | ₹. 4,290 |
| கண் பார்வை அற்றவர்க்கான ஊன்றுகோல் மற்றும் கண்ணாடி | 5 | ₹. 2,650 |
| முழங்கை ஊன்றுகோல் | 1 | ₹. 600 |
| மொத்தம் | 2,132 | ₹.3,68,32,135 |

# தனியார் பங்களிப்புடன் CSR நிதி மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகள்

அரசு திட்டங்கள், எனது சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி, எனது சொந்த நிதி மட்டுமில்லாமல் தனியார் பங்களிப்பில் CSR நிதி பெற்று அதன் மூலம் பல்வேறு நலத்திட்டப்பணிகளை ஒருங்கிணைத்து நிறைவேற்றி வருகிறேன். அந்த வகையில் ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் கடந்த 6 மாத காலத்தில் நிறைவேற்றப்பட்ட உட்கட்டமைப்பு பணிகள்:

**வார்டு 50** சிம்மக்கல் ஆதிமூலம் அக்ரஹாரம், ஆதிமூலம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் 2 புதிய வகுப்பறைக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது.

**வார்டு 61** எஸ்.எஸ்.காலனி மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் ரூ.44 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறைக் கட்டிடங்கள் மற்றும் நவீன கழிப்பறைக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது.

**வார்டு 75** மாநகராட்சி சுந்தரராஜபுரம் ஆரம்பப் பள்ளியில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறைக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதோடு மற்றும் பழைய வகுப்பறைக் கட்டிடங்கள் மராமத்து செய்யப்பட்டுள்ளது.

**வார்டு 75** மாநகராட்சி சுந்தரராஜபுரம் ஆரம்பப் பள்ளியில் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் புதிய கழிப்பறைக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது.

**வார்டு 77** மாநகராட்சி கம்பர் மேல் நிலைப் பள்ளியில் ரூ.10 லட்சம் புதிய வகுப்பறைக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது.

**வார்டு 58** வெள்ளி வீதியார் மாநகராட்சி பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் ரூ.30 லட்சம் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி CSR நிதி பெற்று பல்வேறு திட்டப்பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறேன்.

















## புதிய பேருந்து வழித்தடம்

### ஆரப்பாளையம் – ஊட்டி

மதுரை மத்திய தொகுதியில் அமைந்துள்ள ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில் இருந்து நீலகிரி மாவட்டம் ஊட்டி வரை செல்லும் வழக்கமான வழித்தடத்தில் இல்லாமல் புதிய பேருந்து வழித்தடத்தில் மதுரை – திருப்பூர் – அவினாசி வழியில் நேரடியாக ஊட்டி செல்ல தொகுதி மக்கள் கோரிக்கை வைத்தனர். அவர்கள் கோரிக்கையினை ஏற்று புதிய வழித்தடத்தைத் துவக்கி வைத்தேன்





## மாற்றுத்திறனாளிகளுக்கு ஸ்கூட்டர்கள்

எனது அலுவலகம் மூலமாக பெறப்பட்ட மனுக்களில் தகுதியான பயனாளிகளைக் கண்டறிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் தலைமையின் கீழ் செயல்படும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்குத் தொடர்ந்து பரிந்துரை செய்து வருகிறேன். அவர்களுக்குத் தேவையான உதவிகளை பல்வேறு திட்டங்கள் மூலம் பெற்றுத்தருகிறேன்.

தங்களின் உடல் குறைபாட்டை அவர்கள் எந்த நிலையிலும் எண்ணி சோர்ந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் மாற்றுத்திறனாளி என்ற அருமையான பெயரை வழங்கினார் தலைவர் கலைஞர். அவர்கள் ஓரிடத்தில் தேங்கி விடக்கூடாது, பல இடங்களுக்கு பயணித்து பணியாற்றி அவர்களுக்கு தேவையானவற்றை அவர்களே பெற்று பயனுற வேண்டும் என்ற நோக்கில் வழங்கப்படும் இந்த ஸ்கூட்டர்கள் அவர்கள் வாழ்வை மேலும் மேம்படுத்தும்.

அந்த வகையில் கடந்த 6 மாத காலத்தில் ரூபாய் 22 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் 19 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை வழங்கியது மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.















# ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

**HDFC** வங்கியின் சமூக பங்களிப்பு முயற்சி பரிவர்தன் திட்டம் ஆகும். நாட்டில் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை சமநிலைப்படுத்த பரிவர்தன் திட்டம் தொடங்கப்பட்டது. பரிவர்தன் மூலம் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் விதமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மதுரை மத்தியத் தொகுதியில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் படித்து உயர்கல்வி பயில்வதற்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருந்துவிடக்கூடாது என்ற நோக்கில் திறமையுள்ள மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு HDFC வங்கியின் மூலம் கல்வி உதவித்தொகையினைப் பெற்றுத்தருகிறேன்.

அந்த வகையில் எனது தொகுதியைச் சார்ந்த அரசுப் பள்ளியில் படித்த 97 மாணவர்களுக்கு ரூபாய் 32,83,000 மதிப்பிலான கல்வி உதவித் தொகையினை வழங்கினேன். அவர்களில் 90 பேர் மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது. HDFC வங்கி போன்ற தொண்டு மனப்பான்மை கொண்ட நிறுவனங்கள் தங்களது **CSR** நிதியிலிருந்து வழங்கும் இது போன்ற பெருமதிப்பிலான உதவித்தொகைகள் (சிலருக்கு ரூ. 50,000 & சிலருக்கு ரூ. 30,000 அவர்கள் பயிலும் கல்வி நிறுவனம், பட்டம் மற்றும் கல்விச் செலவு ஆகியவற்றின் அடிப்படையில்) மாணவிகளின் கல்விச் செலவை இலகுவாக்க இத்தொகை மிகுந்த உதவிகரமாய் அமையும்.














## சமுதாய வளைகாப்பு

ஒரு சமுதாயம் வளமுடைய சமுதாயமாக விளங்க வேண்டும் என்றால், பிறக்கின்ற குழந்தைகள் ஆரோக்கியமாக பிறக்க வேண்டும். வருங்காலத்தில் சமுதாயத்தை வளர்ச்சியடைந்த சமுதாயமாக மாற்றுவது நமது இளைஞர்கள்தான். குழந்தைகள் ஆரோக்கியமாக இருப்பதால் அவர்கள் எந்தவொரு செயலிலும் ஆர்வத்தோடு ஈடுபட்டு வெற்றி அடைவார்கள்.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் ஆண்டுதோறும் சமுதாய வளைகாப்பு விழா நடத்தி ஏழை கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த பல்பொருள் தொகுப்பை அரசு வழங்கி வருகிறது. அந்த வகையில் சமுதாய வளைகாப்பு விழாவில் ஒரு சகோதரனாக கலந்துகொண்டு ஏழைப் பெண்களுக்கு ஊட்டசத்து தொகுப்பினை வழங்கி வாழ்த்துவதை எனது கடமையாகக் கருதுகிறேன்.








## மாற்றுத்திறனாளிகளுக்கு நடைபெற்ற சிறப்பு முகாம்

மாற்றுத்திறனாளிகளுக்கான பல முகாம்களை நடத்தி அவர்களுக்கான தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி வருகிறேன். இந்நிலையில் கடந்த 6 மாதங்களில் மதுரை மாநகராட்சி வெள்ளிவீதியார் மேல்நிலைப்பள்ளியில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாமினைத் தொடங்கி வைத்து மனுக்களைப் பெற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினேன்.

## இலவச இ-சேவை மையம்

TNeGA

அரசு வழங்கும் திட்டங்களுக்கு விண்ணப்பிக்க, அரசு வழங்கும் சான்றிதழ்களை அரசு அலுவலகங்களுக்குச் சென்று வாங்கும் பொதுமக்களின் அலைச்சலைக் குறைக்க மக்கள் வாழும் அவரவர் பகுதியிலேயே விண்ணப்பித்து பெறுவதற்கு ஆங்காங்கே இ-சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த 2016-21 காலக்கட்டத்தில் நான் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலம் தொடங்கி எனது சட்டமன்ற அலுவலகத்தில் தொகுதி மக்களுக்கு இலவச சேவையை அளித்து வருகிறேன். இதுவரை வழங்கப்பட்ட சேவைகளில் பட்டியல், உங்கள் பார்வைக்கு

| சேவைகள் | எண்ணிக்கை | மதிப்பீடு |
|---|---|---|
| முதியோர் உதவித்தொகை | 61 | 610 |
| வருமான சான்றிதழ் | 42 | 2520 |
| கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை | 1 | 10 |
| இருப்பிடச் சான்றிதழ் | 32 | 1920 |
| விதவை உதவித்தொகை | 22 | 220 |
| சாதிச் சான்றிதழ் | 18 | 1080 |
| மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை | 4 | 40 |
| ஆதரவற்ற பெண் சான்றிதழ் | 1 | 60 |
| புதிய குடும்ப அட்டை விண்ணப்பித்தல் | 1 | 0 |
| வாரிசு சான்றிதழ் | 9 | 540 |
| முதல் பட்டதாரி சான்றிதழ் | 1 | 60 |
| OBC சான்றிதழ் | 3 | 180 |
| குடும்ப அட்டை திருத்தம் | 3 | 0 |
| முதிர்கன்னி உதவித்தொகை | 1 | 10 |
| திருமணமாகாதவர் சான்றிதழ் | 1 | 60 |
| அமைப்பு சாரா தொழிலாளர் அடையாள அட்டை | 1 | 0 |
| மொத்தம் | 201 | 7310 |

# வான்
## கனவு மெய்ப்படும்

**மதுரை மத்தியத் தொகுதியில் நலிவடைந்த, வாய்ப்பற்ற ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ஒவ்வொன்றும், அக்குடும்பத்தில் உள்ள பெண்களின் மூலம் மாதாமாதம் குறைந்தபட்சம் ரூ.10,000 வருமானம் ஈட்டிட இத்திட்டம் வழி செய்யும் வகையில் இத்திட்டத்தைத் தொடங்கினேன்.**

### விருதுகளை அள்ளிய வான் மகளிர்





வீட்டுக்கு ஒரு ஸ்டார்ட் அப் என்ற இலக்கோடு வார்டு 75 சுந்தரராஜபுரம் பகுதியில் மகளிர் சுய உதவிக் குழுக்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அவர்களைக் கொண்டு ஸ்ரீ பொன் தாரகை எண்டர்பிரைசஸ் என்ற சிறு தொழில் நிறுவனத்தை உருவாக்கினோம். அவர்களுக்குக் கடனுதவி பெற்றுத் தந்து தற்போது அந்நிறுவனம் பெண்களால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

ஒரு வருடம் நிறைவு பெற்று தற்போது அவர்கள் தங்கள் சொந்த தயாரிப்பில் காலூன்றி விட்டார்கள் என்பதை மகிழ்வுடன் உங்களுக்கு தெரியப்படுத்த விரும்புகிறேன். அவர்கள் முயற்சியில் தற்போது மிளிர் என்ற பெயரில் சாம்பிராணி தயாரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மாதம் ரூபாய் 5000 அவர்கள் லாபம் ஈட்டி வருகிறார்கள். தாங்களும் தங்கள் திறன் மற்றும் முயற்சியினால் தொழில் செய்து வருமானம் ஈட்டுகிறோம் என்ற தன்னம்பிகையை அவர்கள் வான் மூலம் பெற்றுள்ளார்கள்.

அதுமட்டுமின்றி சிறந்த மற்றும் இளம் பெண் தொழில்முனைவோருக்கான அறம் விருதினையும், சிகரம் விருதினையும் அப்பெண்கள் பெற்றுள்ளது என்பது எனக்கு மகிழ்வைத் தருவதோடு மட்டுமன்றி தொகுதியில் உள்ள பெண்களுக்கு அது பெரும் ஊக்கத்தை பெற்றுத் தந்துள்ளது.

### ஒருங்கிணைந்த தையற் தொழிற்கூடம்

வான் திட்டத்தின் இரண்டாவது பகுதியாக மகபூப்பாளையத்தில் மதுரை ராஜ்மஹால் நிறுவனத்தின் CSR நிதியின் மூலம் 25 நவீன மின் தையல் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் தையல் தெரிந்த மகளிருக்கு சட்டை, பாவாடை, நைட்டி மற்றும் துண்டுகள் ஆகியவற்றை மொத்தமாக தைத்துத் தரும் மையத்தைத் தொடங்கி வைத்தேன். எந்த முதலீடும் இன்றி மத்தியத் தொகுதியைச் சேர்ந்த பெண்கள் இங்குப் பணியாற்றி அதன் மூலம் பயன் பெற்று வருகின்றனர். தற்போது அவர்கள் வான் என்ற பெயரிலேயே தனி பிராண்ட் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் உள்ளனர். விரைவில் அதற்கான அறிவிப்பு வெளிவரும்.

### மருத்துவ உதவியாளர் பணி பயிற்சி மையம்

மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி மேலவாசல் பகுதியைச் சேர்ந்த பெண்கள் பயனுறும் வகையில் மருத்துவ உதவியாளர் பணிக்கான பயிற்சி மையத்தைக் கடந்த ஆண்டு தொடங்கினேன். இந்த மையத்தில் 30 பெண்கள் பயிற்சி பெற்று நிறைவு செய்த நிலையில் அவர்கள் மதுரையில் பல்வேறு மருத்துவமனைகளில் அப்பெண்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

### திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம்



இலவச தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தை கடந்த ஆண்டு தொடங்கி வைத்தேன். மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எஸ் எஸ் காலனி நாவலர் மூன்றாவது தெருவில் அமைந்துள்ள அம்மையத்தில் எனது முயற்சியில் Full Stack Development Course என்ற 6 மாத படிப்பை இளைஞர்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறோம். முதற்கட்டமாகஅங்கு படித்த மாணவர்கள் பலர் பயன் பெற்றதோடு அதில் 10 இளைஞர்களுக்கு நிறுவனத்தில் பணிக்கான ஆணையும் வழங்கியுள்ளோம். தொடர்ந்து இம்மையத்தில் மதுரை மத்தியத் தொகுதியைச் சேர்ந்த மாணவர்கள் சேர்ந்து இலவசமாக படித்துப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### பொலிவு பெறும் மேலவாசல்

என் மீது அன்பு கொண்ட மேலவாசல் பகுதி மக்களின் வாழ்வு மேம்பட பல திட்டப்பணிகளை அப்பகுதியில் செயல்படுத்தி வருகிறேன். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மதுரைக்கோட்டத்தின் மூலம் அயோத்திதாச பண்டிதர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம், மதுரை மத்தியத் தொகுதி, மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 76 மேலவாசல் திட்டப்பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்புகளின் பழுது மற்றும் மராமத்துப் பணிகள் ரூ. 201.24 லட்சம் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளைத் துவக்கி வைத்தேன்.

இத்திட்டத்தின் கீழ் மூன்று அடுக்குகளாக உள்ள 480 குடியிருப்புகளுக்கு தண்ணீர் வசதி, பூங்கா, குடியிருப்புகளுக்கு இடையே CC Pavement மற்றும் கழிவுநீர் ஓடை சீரமைப்பு போன்ற பழுது மற்றும் மராமத்து பணிகள் ரூ.82.47 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட இருக்கிறது. மேலும், 544 குடியிருப்புகளுக்கான சீரமைப்புப் பணிகள் ரூ.118.77 இலட்சம் மதிப்பிட்டில் மேற்கொள்ளப்பட இருக்கிறது.



# தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சராக எனது செயல்பாடுகள்

## தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த நிகழ்ச்சிகள்

**1** உயர்கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளுக்கும் உள்ள இடைவெளியை நிரப்பும் நோக்கத்துடன் பல்வேறு ஆக்கப்பூர்வமான முன்னெடுப்புகளை மேற்கொண்டுவரும் தமிழ்நாடு தொழில்நுட்பத் துறையின் ICT அகாடமி பெங்களூர் மற்றும் ஹைதராபாத் நகரில் ஒருங்கிணைத்த BRIDGE 23 எனும் மனித வளம், வளர்ச்சி & அணுகல் குறித்த கருத்தரங்கில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டேன்.



**2** உலக அளவில் வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பம் சார்ந்த தொழில் துறைகளில் கவனம் செலுத்தி தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவு வாய்ப்பை உருவாக்க கழக அரசு மேற்கொள்ளும் பல்வேறு முயற்சிகளின் ஓர் பகுதியாக, சென்னை தலைமைச் செயலகத்தில் எனது தலைமையில் Game Developer Association of India கூட்டமைப்பைச் சார்ந்த பல்வேறு ஆன்லைன் கேம் தயாரிப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் தமிழ்நாடு அனிமேஷன், விஸ்வல் எபெக்ட்ஸ், கேமிங் & காமிக் (AVGC) கொள்கை தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.



**3** பிறநாடுகளில் இருந்து தகவல் தொழில்நுட்பத்துறைக்கு முதலீடுகளை ஈர்ப்பது, வேலைவாய்ப்பு உருவாக்கம் உள்ளிட்டவற்றில் கழக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளில் ஓர் பகுதியாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் கொரியா, சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், ஜெர்மனி, தாய்லாந்து, பிரான்ஸ், இலங்கை மற்றும் பங்களாதேஷ் முதலிய நாடுகளின் துணைத் தூதரகத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் உடனான ஆலோசனைக் கூட்டம் எனது தலைமையில் நடைபெற்றது.



**4** உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் ஓர் பகுதியாக "Gen AI and Deep Tech: The Game Changer" எனும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறையை ஊக்குவித்தல், தொழில்முனைவோருக்கு ஏதுவான சூழலை வளர்த்தல், செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆழ் தொழில்நுட்பத்தில் மேம்பட்ட நிலையை உருவாக்குதல் மற்றும் புதிய மாற்றங்களுக்கான தொழில்நுட்பங்களைப் பொறுப்புடைமையுடனும், தக்க நெறிமுறைகளுடனும் செயல்படுத்துவதற்கான கொள்கைகளை வகுத்தல் ஆகியவற்றில் தமிழ்நாட்டின் அர்ப்பணிப்பினை எடுத்துரைத்தேன்.



**5** தமிழ்நாடு மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா இடையே கையெழுத்திடப்பட்டுள்ள, இரு மாநிலங்களுக்கிடையே அறிவுப் பகிர்வை எளிதாக்குவதற்கும், புத்தாக்கம் மற்றும் திறன் பயிற்சிகளுக்கான கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வகைசெய்யும் புத்தாக்க பரிமாற்ற உடன்படிக்கையை (Innovation Exchange Agreement) மேற்கு ஆஸ்திரேலியாவின் துணைப் பிரதமர் மாண்புமிகு ரீட்டா சஃபியோட்டியுடன் இணைந்து வெளியிட்டேன்.



**6** தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னோடி மாநிலம் நம் தமிழ்நாடு. 1999இல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடத்திய தமிழிணையம் 99 மாநாடு, வெற்றிகரமான தொடக்கமாகும். தற்போது 25 ஆண்டுகள் கழித்து, தமிழ்நாடு அரசு கணித்தமிழ்24 மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியது. இம்மாநாடு, செயற்கை நுண்ணறிவு யுகத்தில் தமிழுக்கான இடம் குறித்து விவாதிக்கும். உலகெங்குமிருந்து புகழ்பெற்ற அறிஞர்கள் கலந்துகொண்டார்கள். தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியின் கனவை நனவாக்குகிறது நம் அரசு...



**7** தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாவல்பட்டில் 59.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை (IT Tower) காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.



**8** தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்தல் மற்றும் நலத்திட்டங்களுக்கு விண்ணப்பம் செய்வதற்கான http://tnctvwb.in என்கிற இணையதளத்தை தொடங்கி வைத்தேன்.



**9** அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் 2024 நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக ‘ஒளிரும் எதிர்காலம் – வாய்ப்புகளும் சவால்களும்‘ என்கிற தலைப்பில் நடைபெற்ற அமர்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினேன்.



# UmagineTN-2024

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில், நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில், நடைபெற்ற UmagineTN 2024, தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை, மாண்புமிகு முதலமைச்சர் திரு.M.K.Stalin அவர்கள் தொடங்கி வைத்தார். இம்மாநாட்டில் பல்வேறு நவீன தகவல் தொடர்பு நிறுவனங்கள், அரசு நிறுவனங்களின் படைப்புகள், முன்னெடுப்புகள் காட்சிபடுத்தப்பட்டன. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வல்லுனர்கள், நிறுவன தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்ற பலவேறு கருத்தரங்குகள் நடைபெற்றன.

தொடக்க விழாவில் சென்னை, கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளில் 1000 முக்கிய இடங்களில் இலவச வைஃபை சேவைகள் வழங்கிடும் திட்டத்தின் முதற்கட்டமாக, சென்னையில் 500 முக்கிய இடங்களில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் இலவச வைஃபை வசதி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

UmagineTN 2024 தகவல் தொழில்நுட்ப மாநாட்டின் நிறைவு விழாவில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு குறு , சிறு & நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் ஆகியோருடன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதோடு, JIGSAW புத்தாக்க இணையதளத்தையும் தொடங்கி வைத்தார்.










# நாடாளுமன்ற தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு:

ஓர் அரசியல் இயக்கத்தின் தேர்தல் அறிக்கை என்பது அதன் சித்தாந்தம் மற்றும் தொலைநோக்குப் பார்வையின் வெளிப்பாடாகும். அந்த வகையில் சமூகநீதி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம் மற்றும் மாநில சுயாட்சி உள்ளிட்ட எங்கள் கொள்கைகளின் வெளிப்பாடாக உருவாக்கப்பட்டுள்ள 2024 மக்களவைத் தேர்தலுக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையானது, இவ்வறிக்கையை தயாரிக்கும் நாடாளுமன்ற தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவில் உறுப்பினராக இடம்பெற்றேன். இப்பணிக்காக மேற்கொண்ட பயணங்கள், பங்கேற்ற கருத்துக் கேட்புக் கூட்டங்கள் ஆகியவற்றை மிக முக்கியமான அனுபவமாகக் கருதுகிறேன்.








திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனைகளை வீடுதோறும் கொண்டு சேர்க்கும் வகையில் இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் திண்ணைப் பிரச்சாரத்தைத் தொடங்குவது என பிப்ரவரி 26–ஆம் தேதியன்று மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இந்திரா நகர் பகுதியில் பொதுமக்களிடம் துண்டறிக்கைகளை வழங்கி இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் என்ற பரப்புரை குறித்து விளக்கிக் கூறியதோடு, கோரிக்கை மனுக்களையும் பெற்றுக்கொண்டேன்.







கோவை மாநகர் மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் சித்தாபுதூரில் நடைபெற்ற ‘மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினேன். இந்நிகழ்ச்சியில் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் திரு.நா.கார்த்திக் அவர்கள், அப்போதைய கோவை மாநகராட்சி மேயர் திருமதி. கல்பனா, கட்சி நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.







# கருத்தரங்குகள், முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள்:

எனது துறை சார்ந்த, மக்கள் நலன் சார்ந்த நிகழ்வுகள், கருத்தரங்கங்களில் நான் தவறாமல் கலந்து கொண்டு வருகிறேன்.
அந்த வகையில் கடந்த மோதங்களில் நான் கலந்து கொண்ட நிகழ்வுகள் குறித்த குறிப்புகள் உங்கள் பார்வைக்கு...

ICOSI 2023



சென்னை ஐஐடி கல்வி நிறுவனத்தில் அமைந்துள்ள புத்தொழில் குறித்த ஆய்வு மையமான CREST ஒருங்கிணைத்த "International Confluence Conference on Start-ups and Innovation" புத்தாக்கம் மற்றும் புத்தொழில் தொடர்பான சர்வதேச ஆய்வு மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நிறைவுரையாற்றினேன்.

TiECON KERALA 2023




கேரள மாநிலம், கொச்சியில் நடைபெற்ற TiECON Kerala 2023 கருத்தரங்கில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்றேன்.

TAKEPRIDE 2022




சென்னையில் நடைபெற்ற இந்திய தொழில் கூட்டமைப்பின் (CII) Young Indians பிரிவின் Take Pride 2023 - தேசிய அளவிலான மாநாட்டில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, இளம் தொழில் முனைவோருடன் கலந்துரையாடினேன்.

VIT



வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் (VIT) நடைபெற்ற 48வது அகில இந்திய சமூகவியல் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாநாட்டைத் துவக்கி வைத்து உரையாற்றினேன்.

# மதுரை மாநகர் மேம்பாட்டுக்கான உட்கட்டமைப்புத் திட்டங்கள்
# கோரிப்பாளையம் பாலம் கட்டும் பணி விரைவு பெறுகிறது.

கடந்த ஆண்டு கோரிப்பாளையம் சந்திப்பில் ரூ.190.40 கோடி மதிப்பீட்டிலான மேம்பால கட்டுமானப் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து அப்பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது.

## அப்பல்லோ சந்திப்புப் பாலம்

கடந்த ஆண்டு மதுரை – தொண்டி சாலையில் ரூ.150.28 கோடி மதிப்பீட்டில் அப்பல்லோ சந்திப்பில் சாலை மேம்பாலம் மற்றும் வட்ட வடிவச் சந்திப்பு அமைக்கும் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து அப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.


போக்குவரத்து நெரிசலுக்கு நிரந்தர தீர்வு காண
**மதுரை கோரிப்பாளையம், மேலமடை சந்திப்புகளில் மேம்பாலங்கள்**
ரூ.340.68 கோடியில் அமைகிறது
பசுமைச் சாலைக்கும் இணைப்பு தேவை

## வண்டியூர் கண்மாய் மேம்பாட்டு பணிகள்

மதுரை வண்டியூர் கண்மாயை மேம்படுத்தி ரூ.99 கோடியில் டூரிஸ்ட் ஸ்பாட் திட்டத்தின் கீழ் வண்டியூர் கண்மாயை மதுரை மக்களுக்கான சிறந்த பொழுதுபோக்கு இடமாக மாற்ற மாநகராட்சி நிர்வாகம், ரூ.99 கோடியில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.


வண்டியூர் கண்மாயின் மையத்தில் அமையும் சிறிய தீவு


வாகன நிறுத்த வசதியுடன் அழகாக்கப்படும் வண்டியூர் கண்மாய்

## மக்களுடன் முதல்வர்

அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையில் மக்களுடன் முதல்வர் என்ற புதியத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள். அதன் தொடர் நிகழ்வாக மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.57 ஆரப்பாளையம் பகுதியில் சிறப்பு முகாமினைத் துவக்கி வைத்து பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டேன்.

மேலும் மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண் 75 சுந்தர்ராஜபுரம் மண்டலம் 2 வார்டு எண் 21, 22 ஆகிய வார்டு பகுதிகளில் நடந்த சிறப்பு முகாமைத் துவக்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டதோடு அவை உடனடியாகத் தீர்வு காணப்பட்டது.








# மக்கள் குறை தீர்ப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் போன்ற மகத்தான திட்டங்கள் மூலம் மக்களைத் தேடிச் சென்று உதவி வருகிறது. அதே கொள்கையை பொது வாழ்க்கைக்கு வந்த கடந்த 7 ஆண்டுகளாகக் கடைபிடித்து வரும் நான் எனது அலுவலகத்தைத் தேடி மக்கள் வருவதைக் குறைக்கும் வகையில் ஆங்காங்கே சில ஏற்பாடுகளைச் செய்துள்ளேன்.

மதுரை மகபூப்பாளையத்தில் எனது மத்தியத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் இலவச இ-சேவை மைய வசதியோடு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. எனது இல்ல வளாகத்தில் முகாம் அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

தொகுதிக்குட்பட்ட 16 வார்டுகளில் 25 இடங்களில் புகார் பெட்டி நிறுவப்பட்டு அதன் மூலம் மக்கள் என்னைத் தொடர்பு கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. பெறப்படும் புகார்கள் துறை ரீதியாக அனுப்பி வைக்கப்பட்டு அதன் மீது தொடர் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் எனது குறைதீர்க்கும் மைய தொலைபேசி எண்

**73055 19999**

மின்னஞ்சல்: **ptrmadurai1@gmail.com**

இந்த அறிக்கையில் உள்ள QR code மூலமாகவும் எந்த நேரமும் புகார்களையும், கோரிக்கைகளையும் மக்கள் அளிக்கலாம்.





# நன்றி..!

திராவிட மாடல் அரசை வழிநடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்னைத் தொடர்ந்து ஊக்கப்படுத்தி என்னைத் திறம்பட பணியாற்ற ஊக்கமளித்து வருகிறார்.

தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையினை நான் திறம்பட நிர்வகித்து வருகிறேன். இந்தத் துறையின் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டில் இந்தத் துறையினால் ஏற்படவுள்ள மாற்றத்திற்கும் பல முன்னெடுப்புகளை எடுத்து வருவதோடு அதற்கான பலன்கள் இன்னும் ஓரிரு மாதங்களில் உங்களுக்குத் தெரியவரும் என்று உறுதி கூறுகிறேன்.

என்றென்றும் மதுரை மத்தியத் தொகுதி மக்களின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமாகப் பணியாற்றுவேன்.

நன்றி. வணக்கம்.

தங்கள் அன்புள்ள

பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன்.

மக்கள் தொடர்பு மைய தொலைபேசி
73055 19999
/ptrmadurai /meendumptr /PTRmadurai